**செய்தி வெளியீடு எண்: 791** **நாள்: 31.10.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (31.10.2018) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 295 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை – ராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தருமபுரி, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 93 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 சாலை மேம்பாலங்கள் மற்றும் ஒரு ஆற்றுப் பாலம் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் போக்குவரத்து வசதியினை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நாமக்கல் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, 295 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை – ராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலையை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். இம்மேம்படுத்தப்பட்ட சாலையினால், மல்லியக்கரை, திம்மநாயக்கன்பட்டி, ராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் பயனடைவார்கள். மேலும், ஆத்தூரில் இருந்து திருச்செங்கோடு மற்றும் ஈரோடு செல்லும் மக்கள், மேம்படுத்தப்பட்ட இச்சாலையின் மூலம் விரைவாகவும் பாதுகாப்பாகவும் பயணம் செய்ய இயலும்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், காரமடையில் ரயில்வே கடவுக்கு மாற்றாக 41 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகரில் ரயில்வே கடவுக்கு மாற்றாக 24 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரில் ரயில்வே கடவுக்கு மாற்றாக 20 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாணியார் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம், 388 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 சாலை மேம்பாலங்கள், ஒரு ஆற்றுப் பாலம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சாலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் (முகூபொ) திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் டாக்டர் அருண் தம்புராஜ், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) திருமதி இரா. கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**